3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப்படாதது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். விதிமுறைகளிலே

Rule 6 (1).—At the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the members of the Assembly a panel of not more than six Chairmen.

என்று இருக்கிறது. இந்த செஷன் ஆரம்பித்து பல நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு அவைத் தலைவரவர்களால் 'பேனல் ஆஃப் சேர்மன்' இதுவரை நியமிக்கப்படவில்லை. இதற்கான விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

4. தகவல் கோரல்.

மாயூரத்தில் நடைபெற்ற பேருந்து விபத்துபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து

திரு. என். கிட்டப்பா: பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், சார். மாண்புமிகு முதல்வரவர்கள் மாயூரத்திலே நடைபெற்ற பேருந்து விபத்திலே சிக்கிய நான்கு பேர்களுக்கு தலைக்கு ஆயிரம் ரூபாய் வழங்கியிருப்பதைச் செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்தேன். அதற்காகத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 9—7—1977 ஆம் தேதியன்று சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து விபத்துக்குள்ளாகி 10 பேர்களுக்கு மேல் இறந்திருப்பதாக நம்பத் தகுந்த முறையில் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே மீதிப் பேர்களுக்கும் அத்தகைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த அடிப்படையில் இது பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் ஆகும்? ஏதாவது பேசியிருந்தால் அதற்குமேல்தான் இன்பர்மேஷன் கேட்பார்கள். விவாதம் ஏதேனும் நடந்து இன்பர்மேஷன் தேவை என்றால்தானே இன்பர் மேஷன் கேட்க முடியும்? எடுத்தவுடனேயே இன்பர்மேஷன் என்று கேட்டால் பதில் சொல்ல அமைச்சர் தயாராக இருக்க வேண்டாமா? நடக்கின்ற விவாதத்திலே உறுப்பினர்கள் பேசுவதிலே சந்தேகம் ஏதாவது இருந்தால் பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் கேட்கலாமே தவிர எடுத்தவுடனேயே இப்படிக்